Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 140

சனிக்கிழமை 15 ஏப்ரல் 2023

சித்திரை 02 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# அரச எதிர்ப்புப் போர் யாழில் தொடக்கம்!

## தமிழர் தாயகம் முழுவதும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 15

தமிழ் மக்களின் மீதான நில, தொல்லியல் ஆக்கிரமிப்பு, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்க் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள வடக்கு - கிழக்கு தழுவிய போராட்டத்தின் முதற்கட்டமாக யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை போராட்டம் நடைபெறவுள்ளது.

»11

## யாழ்ப்பாணத்துக்குச் சென்ற முதல் இந்தியப்பிரதமர் நானே

### மோடி பெருமிதம்



கொழும்பு, ஏப். 15
இலங்கையில் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்த முதல் இந்தியப் பிரதமர் நான்தான். இலங்கையில் உள்ள தமிழர்கள் உதவிக்காகக் காத்திருந்தனர் - இவ்வாறு இந்தியப் பிரதமர்

»11

மறித்தும் நிற்காத

## கார் மீது பொலிஸ் துப்பாக்கிச்சூடு

### ஒருவருக்கு காயம் விசாரணை தீவிரம்

மன்னார், ஏப். 15
யாழ்ப்பாணத்திலிருந்து முழங்காவில் ஊடாக மன்னார் நோக்கிப் பயணித்த கார் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இரவு சேர்க்கப்பட்டுள்ளார்.

»11

## 24 பில்லியன் டொலர் நிதி இடைவெளி

### சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 15
இலங்கையில் 2023ஆம் ஆண்டுக்கும் 2027ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில், 24 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி இடை

»11



## ரணில் - சஜித் சமரசம் தோல்வி

### பிரதமர் பதவியையும் ஏற்கவில்லை

கொழும்பு, ஏப். 15
ஐக்கிய தேசியக் கட்சியையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் இணைத்துக் கூட்டணி அமைக்கும் முயற்சி கைவிடப்பட்டுள்ளது. இந்த

»11

## பருத்தித்துறையில் சிசு சாவு: 17 இல் நீதிமன்ற விசாரணை

முல்லைத்தீவு, ஏப். 15
பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் மருத்துவக்கண்காணிப்பின்மை காரணமாக சிசுவொன்று உயிரிழந்ததாக அறிக்கையிடப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணையை, நாளைமறுதினம் திங்கட்கிழமைக்கு நிர்ணயித்து பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

»11

பண்டிகைக் கொடுப்பனவு

## இராணுவ அதிகாரிகளுக்கு இம்முறை இல்லை

கொழும்பு, ஏப். 15
தமிழ் - சிங்களப் புது வருடத்தை முன்னிட்டு படையினருக்கு வழங்கப்படும் 10 ஆயிரம் ரூபா விசேட பண்டிகைக் கொடுப்பனவு இந்த

»11

## என்னுடைய 'சாதியை' கேட்டார் விக்னேஸ்வரன்

### தன்னை உத்தமனாக்க தவறுகளை ஏற்றுக்கொள்ளவும்மாட்டார்

### ஐங்கரநேசன் பகிரங்கக்குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 15
தென்மராட்சியைச் சேர்ந்த அருந்தவபாலனின் சாதியைக் குறிப்பிட்டதுடன், நீங்கள் என்ன சாதியெனக் குறிப்பிட முடியுமா என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் எனக்கு மின்னஞ்சல் அனுப்பியிருந்தார் - இவ்வாறு தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

»11

## கீரிமலைக் கடற்கரையில் நாவலர் சிலை திறப்பு



யாழ்., ஏப். 15
கீரிமலை, கண்டகி கடற்கரையில் வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் அனுமதியுடன் ஆறுமுகநாவலரின் மூன்றே முக்கால் அடி உயர

»11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு, இயக்கச்சியில் சீனாவுக்கு 700 ஏக்கர் காணி

## இந்தியாவின் தலையீடு அவசியம் சிறீதரன் எம்.பி. வலியுறுத்து

கிளிநொச்சி, ஏப். 15

**கடன்களை சீர்செய்வதற்கான பதிலுபகாரமாக, இரணைமடுவுக்கு தெற்குப் புறமாக உள்ள 500 ஏக்கர் மற்றும் இயக்கச்சியை அண்மித்த பகுதியில் உள்ள 200 ஏக்கர் காணி ஆகியவற்றை சீனாவுக்கு வழங்குவதற்கு முழு முயற்சியையும் இலங்கை அரசாங்கம் எடுத்துள்ளமை தெரியவந்துள்ளது. இந்த விடயத்தில் இந்தியா தலையீடுசெய்து தடுக்க வேண்டும் இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரணைமடுவின் தெற்குப்புறமாக கிட்டத்தட்ட ஆயிரம் சிங்களக் குடும்பங்களை குடியேற்றுவதற்கான வீடுகளைக் கட்டி முடித்துள்ளார்கள். பின்னர் அது பாவனை இல்லாது இராணுவ குடியேற்றத் திட்டம் எனும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். தற்போது கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களின் எல்லையாக அமைந்திருக்கின்ற இரணைமடுக் குளத்தின் தெற்குப் புறமாக கிட்டத்தட்ட 500 ஏக்கர் காணியையும், இயக்கச்சிப் பகுதியை அண்மித்து உள்ள 200 ஏக்கர் காணியையும் சீனாவுக்கு வழங்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இலங்கையின் கடன்களை சீனா சீர்செய்வதற்கான பதிலுபகாரமாகவே இந்தக் காணிகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று நம்பகரமான தகவல்கள் கிடைத்துள்ளன. இது அபாயகரமானது.

கரிப்பட்டமுறிப்பு, ஒட்டுசுட்டான் போன்ற பகுதிகளிலும் தொல்லியல் திணைக்களத்தின் ஊடாக பௌத்த அடையாளங்கள் இருப்பதாகக் காண்பித்து அந்த இடங்களை ஆக்கிரமிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தியாவுக்கு ஒன்றை வெளிக்காட்டி மறுபுறம் தன்னுடைய வேலைத்திட்டங்களை சீனாவை வைத்தே கையாளுகின்ற பெரும் யுக்திகளை இலங்கை அரசு கையாளுகிறது. தமிழர் தாயகப் பகுதிகளை இவ்வாறு ஆக்கிரமித்து விற்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளில் இந்தியா தலையீடு செய்ய வேண்டியது தலையாய கடமையாகும். நீண்டகால அடிப்படையில் தமிழ் மக்களுடைய இனத் தனித்துவத்தை, நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்து சிங்கள மயப்படுத்தும் செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கு இந்தியா கரிசனை கொள்ளவேண்டும் - என்றார். (ச-இ)



புத்தாண்டு தினமான நேற்று, யாழ்ப்பாணம் பண்ணைச் சுற்றுவட்டத்தில் நாகபூஷணி அம்மன் சிலை வைக்கப்பட்டு உருத்திரசேனையால் அபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. (ம-14,20)

## சீனாவுக்கு குரங்குகள் ஆராய குழு நியமனம்

கொழும்பு, ஏப். 15

இலங்கையிலிருந்து சுமார் ஒரு லட்சம் குரங்குகளை சீனாவுக்கு வழங்குவதற்கு நாடெங்கிலும் எதிர்ப்புகள் வலுத்துள்ள நிலையில், இது தொடர்பில் மறுபரிசீலனை செய்வதற்காக நால்வர் அடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் வனவிலங்கு, நீதி, பெருந்தோட்டங்கள் மற்றும் விவசாய அமைச்சுக்களின் அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர்.

இலங்கையில் அதிகரித்துவரும் குரங்குகளின் எண்ணிக்கையை குறைக்கும் முகமாக முதற்கட்டமாக ஒருலட்சம் குரங்குகள் சீனாவுக்கு வழங்கப்படவுள்ளன. சீனாவிலுள்ள மிருகக்காட்சிச்சாலைகளுக்கு இலங்கைக் குரங்குகளை வழங்குமாறு சீன பிரதிநிதிகள் குழு விடுத்த கோரிக்கைக்கமைய அவை வழங்கப்படவுள்ளன.

இந்த விடயம் தற்போது பல விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. அதன் செயல்வடிவம் குறித்து இதுவரை சரியான விளக்கம் அளிக்கப்படவில்லை என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தநிலையில் குரங்குகளை சீனாவிடம் ஒப்படைக்க முன் முறையான கணக்கெடுப்பு மற்றும் ஆய்வு நடத்த குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

*பேர்ள் கப்பல் விபத்து:*

## இழப்பீட்டைத் தவிர்க்க கையூட்டு வழங்கல்?

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலுக்கு இழப்பீட்டைப் பெறுவதற்கு சட்டநடவடிக்கை எடுக்காத வகையில் இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தத் தகவல்கள் தொடர்பில் உடனடி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபருக்கு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச உத்தரவிட்டுள்ளார்.

கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் இடம்பெற்ற எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்தால் சமுத்திர மாசடைவு தொடர்பில் உரிய தரப்பினருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் இழப்பீட்டைப் பெறுவதற்கு சட்டநடவடிக்கை எடுக்காத வகையில் 250 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி, லண்டனின் வங்கிக் கணக்கொன்றுக்குக் கப்பலின் காப்புறுதி நிறுவனத்தால் வைப்பிலிடப்பட்டுள்ளது என தகவல்கள் கசிந்துள்ளன.

அந்தத் தகவலின் உண்மைத் தன்மை தொடர்பில் ஆராயும் பொறுப்பை குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார். (ச-இ)



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சோபகிருது வருடப்பிறப்பை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை காலை முருகப்பெருமானுக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து வள்ளி தெய்வயானை சமேதரராக வேற்பெருமான் வெள்ளி மயில் மீதினில் உள்வீதி மற்றும் வெளிவீதியில் எழுந்தருளி வலம்வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (ம-20)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா சித்திரைப் புத்தாண்டு தினமான நேற்று வெள்ளிக்கிழமை ஆயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் சிறப்பாக இடம்பெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை அடியவர்கள் புடைசூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-66)

## சித்திரைப் பெருவிழா தமிழிசை அரங்கு

இணுவில் அறிவாலயத்தின் ஏற்பாட்டில் சித்திரைப் பெருவிழா தமிழிசை அரங்கு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இணுவில் அறிவாலய மண்டபத்தில் அறிவாலயத் தலைவர் பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறப்பு நிகழ்வுகளாக இணுவைத் தமிழ்ச் சங்கத்தின் பட்டிமன்ற நிகழ்வும், இணுவையூர் அழகேசன் மைந்தர்கள் பக்கவாத்திய சகிதமாக நிகழ்த்தும் தமிழிசையும் இடம்பெறவுள்ளன என்று நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-14,66)

# மக்களின் குரலை நசுக்குவதே ஊடகம் மீதான அடக்குமுறை

## உதயன் மீதான அத்துமீறல்களுக்கு பல்கலை மாணவர் ஒன்றியம் கண்டனம்

**யாழ்ப்பாணம், ஏப். 15**

**ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றான ஊடகத்தை அச்சுறுத்துவதும், ஊடகத்துக்கு எதிராக வன்முறையில் ஈடுபடுவதும், மக்களின் குரலை நசுக்குவதும் ஒன்றே. இதை நாம் ஒருபோதும் அனுமதிக்கமுடியாது - என்று உதயன் மீதான தாக்குதலுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம் வெளியிட்டுள்ளது.**


இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

இலங்கையில் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான பல்வேறு அச்சுறுத்தல்களும் அடக்குமுறைகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

குறிப்பாக தமிழ் ஊடகங்கள் பல்வேறு தரப்பினராலும் அதிகளவில் பாதிக்கப்படுகின்றன. கடந்தகாலங்களில் ஊடகத்துறை சார்ந்தவர்களுக்கு ஏற்பட்ட அநீதிகளுக்கு இதுவரையும் நீதி கிடைக்காமல் இருப்பது அனைவரும் அறிந்த ஒன்றேயாகும்.

இந்த நிலையில் சட்டரீதியாக அணுகவேண்டிய விடயங்களுக்கு ஊடகங்களுக்குள்ளே அத்துமீறி நுழைந்து ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்வது கண்டிக்கத்தக்க விடயமாகும். ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றான ஊடகத்தை அச்சுறுத்துவதும் வன்முறையில் ஈடுபடுவதும் மக்களின் குரலை நசுக்குவதும் ஒன்றே. இதை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

பல்வேறு நெருக்கடிக்குள் மக்களுக்காக தமது செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக யார் செயற்பட்டாலும் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்வதே அறம் ஆகும். மக்களுக்கான பணியை முன்னெடுத்துவரும் ஊடகங்களுக்கு எதிராக பல்வேறு வடிவங்களில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைச் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம். - என்றுள்ளது. (ம-14-125)



## பருத்தித்துறையில் கொவிட் தொற்று!

### பெண்ணொருவர் அடையாளம்

யாழ்ப்பாணம், ஏப். 15

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. கடந்த சில நாள்களாக காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குறித்த பெண் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டார்.

அந்தப் பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றுப் பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என யாழ். போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி சி.யமுனானந்தா தெரிவித்தார். தற்போது அவர் யாழ். போதனா மருத்துவமனை விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். (ச)

## தாக்குதல்கள் எதற்கும் அஞ்சாதவனே உதயன்

### யாழ். மாநகரசபை முன்னாள் உறுப்பினர் தர்சானந் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப். 15

எந்தவொரு தாக்குதல்களுக்கும் அஞ்சாதவன்தான் உதயன் என்று யாழ். மாநகரசபை முன்னாள் உறுப்பினர் ப.தர்சானந் தெரிவித்தார்.

அவர் அனுப்பியுள்ள கண்டன அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

அச்சுவேலிப் பகுதியில் அரச காணியை பலவந்தமாக ஆக்கிரமித்து மதமாற்றப்பணியில் ஈடுபடும் சட்டவிரோத மதக்குழுவானது, அதிசத்தத்துடன் வழிபாடுகளில் ஈடுபடுகின்றது.

அண்மையில் வழிபாட்டில் ஈடுபட்டவேளை தமது சபைக்குக் கல்லெறிந்தனர் என்று ஆவேசமடைந்து அயலிலுள்ள வீட்டுக்குச்சென்று பெண்ணொருவரைத் தாக்கியிருந்தனர். அதனையடுத்து அந்தப் பெண்ணால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய குறித்த மதக்குழுவின் போதகர் உட்பட்டோர் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த விடயத்தை உரிய ஆதாரங்களுடன் விருப்பு வெறுப்பு இன்றி நடுநிலைமையாக செய்தியாக வெளியிட்ட 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தை அச்சுறுத்தும் விதமாக, மதக்குழுவின் போதகர் உள்ளிட்ட பாதகர் கும்பல் உதயன் பத்திரிகையின் தலைமைக் காரியாலயத்துக்குச்சென்று அராஜகமாக செயற்பட்டது.

இது ஊடக சுதந்திரம் மற்றும் சுயாதீன செய்தி அறிக்கையை கேள்விக்குட்படுத்தும் ஓர் அராஜக செயலாகும். தாம் செய்தது பிழை என்று தெரிந்தும், அதைச் செய்தியாக்கி மக்களுக்கு வெளிப்படுத்தியதை சட்டரீதியாகவின்றி அராஜக முறையில் அணுகியமையை வன்மையாகக் கண்டிக்கின்றேன். இது உதயனுக்கு முதல் முறை அல்ல. ஆயுததாரிகளின் நேரடித் தாக்குதலுக்கே அஞ்சாத உதயன்இவர்களுக்கா அஞ்சப்போகிறான்? - என்றுள்ளது. (ம-14)




எப்ப எங்கட கல்விக்குள்ள அரசியல் மூக்கை நுழைச்சுதோ அண்டையோட எங்கட அழிவுகாலமும் தொடங்கிட்டுது. இவ்வளவு பட்டும் இன்னும் அந்த அரசியல் விளையாட்டு நிக்கேலை எண்டதுதான் ஆகப்பெரிய சோகம். 'ஆட்டையைப்போட்ட' அரசியல்வாதி கொஞ்சக்காலம் யாழ்ப்பாணத்தில கிலுக்கிக் கொண்டு திரியேக்க வீணைக்காரர் பம்மிக்கொண்டிருந்தார். இப்ப ஆட்டையைப் போட்டவருக்கு 'காத்துப்போன தால', திரும்பவும் வீணையை 'பழைய சுருதியில' வாசிக்கத் தொடங்கியிருக்கினம்.

தான் படிச்ச பள்ளிக்கூடத்துக்கு தன்ர சொல்லைக் கேக்கக் கூடிய ஆளைத்தான் புது அதிபராப் போடவேணும் எண்டு வீணைக்காரர் விடாப்பிடியா நிண்டவராம். அதால அதிபர் பதவிக்குப் பொருத்தமான சிலருக்கு வீணைக்காரரின்ர சார்பில் கொஞ்சப்பேர் தூது போயிருக்கினம்.

நீங்கள் ஒண்டும் செய்யத் தேவையில்லை. வந்து கதிரையில இருந்தாக் காணும். என்ன பிரச்சினை வந்தாலும் அமைச்சர் பாப்பார். எண்டு வாக்குறுதியள் எல்லாம் குடுத்திருக்கினம். இப்ப அதிபரா வந்தவர் அப்பிடியான நிபந்தனையளுக்கு கட்டுப்பட்டுத்தான் வந்திருக்கோணும் போல. ஏனெண்டால் அவர் அதிபரா வந்ததுக்கு ஒரு ஹொட்டலில பார்ட்டி ஒண்டு வைச்சவை. அந்தப் பார்ட்டிக்கும் வீணைக்காரர் போய் நிண்டிருக்கிறார். தனக்கு இசைவான ஆக்களை அதிபராப் போடுறது ஒண்டும் அரசியல்வாதியளுக்குப் புதிசில்லத்தான். ஆனால் ரூல்ஸின்படி பெல்லோ செய்யவேணும். இஞ்ச அப்பிடியொண்டும் செய்யாமல், அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோராமலேயே, உள்ளுக்கால ஆளை செலக்ட் பண்ணித்தான் இந்த நியமனம் குடுபட்டிருக்கு.

இதே வேலையை பக்கத்து மாவட்டங்களிலையும் செய்யிறதுக்கு வீணைக்காரர் ஓடுபட்டுத் திரியினம். ஏற்கனவே அங்க உள்ள ஒரு வலயத்தின்ர பணிப்பாளரும் அந்தக் கட்சி அபிமானி. அதால அவரை வைச்சுக் காய்நகர்த்துகினம். அங்க உள்ள பேமஸான, கட்டுக்கோப்பான 'மகா' பள்ளிக்கூடத்து அதிபர் இன்னும் நாலைஞ்சு மாதத்தோட பென்சன் எடுக்கிறதால, அதுக்குப் பதிலாப் புது அதிபருக்கு 'கோல்' பண்ணி எடுக்கோணும். ஆனால் அதொண்டும் வேண்டாம் எண்டமாதிரிச் சொல்லிப்போட்டாராம் வலயப் பணிப்பாளர். ஏன் அவர் இப்பிடி அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோர வேண்டாமெண்டு தடுக்கிறார்? எண்டு சிலர் ஆராய்ஞ்சிருக்கினம். அப்பதான் அவைக்கு ஒரு விசயம் வெளிச்சிருக்கு. ஏற்கனவே அந்த 'மகா' பள்ளிக்கூடத்துக்கும் புது அதிபரா ஓராளை வீணைக்காரர் எடுத் திட்டினம். அதாலதான் இப்பிடி விண்ணப்பம் கோர வேண்டாம் எண்டு சொல்லுப்பட்டிருக்கு. இப்பிடியே போனால் கொஞ்ச நாளில வடக்கில உள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலையும் அதிபர்மார் வீணை வாசிக்கிறவையாத்தான் இருக்கப் போகினம் கண்டியளோ.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி வின்ரன் சிவபாக்கியம்

நல்ல போராட்டத்தை போராடினேன்
ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தை காத்துக்கொண்டேன்
11 தீமோ 4:7



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், யாழ். சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வின்ரன் சிவபாக்கியம் கடந்த (12.04.2023) புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - லக்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற எல்பட்கனகு வின்ரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்டன், சுவேந்தினி மற்றும் சாந்தினி, இன்பம், ராகினி, தேவராணி, சுதர்சினி, செலஸ்ரீன், தர்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கீதா, பரராஜசிங்கம், திருகேதீஸ்வரன், ரவிசங்கர், ஈசன், சட்குணராசா, பர்த்தன், டொரின், மன்மதகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பேரப்பிள்ளைகளின் பேர்த்தியாரும், பூட்டப்பிள்ளைளின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் எதிர்வரும் (17.04.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித பரியோவான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தோற்றம் 25.03.1948 மறைவு 12.04.2023

78, குருசோ வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
077 104 3101

தகவல்:
குடும்பத்தினர்.

# சொந்த மைதானத்தில் கவிழ்ந்தது கொல்கத்தா

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை 23 ஓட்டங்களால் வீழ்த்தியது சன்ரைஸஸ் ஹைதராபாத் அணி.

ஐ.பி.எல். தொடரின் 19ஆவது ஆட்டம் ஈர்டன் கார்டின் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. சன்ரைஸஸ் அணியின் தலைவராகச் செயற்பட்ட வோர்னர் நேற்று நீக்கப்பட்டார். மார்க்கம் தலைமையில் களமிறங்கிய அந்த அணி வழமைக்கு மாறாக ஓட்டங்களை ஆரம்பத்திலிருந்தே குவித்தது.





ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக நுழைந்து கடைசி வரையில் ஆட்டமிழக்காமல் 55 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள் 12 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக சதம் குவித்தார் ஹரி புருக். இந்தத் தொடரின் முதலாவது சதமாகவும் இது பதிவானது. அணித் தலைவர் மார்க்கம் அதிரடியாக அரைச் சதம் குவித்தார். இறுதிநேர அதிரடியுடன் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 228 ஓட்டங்களைக் குவித்தது சன்ரைஸஸ். பந்து வீச்சில் ரசல் 3 இலக்குகளை வீழ்த்தினார்.

சவாலான இலக்கை துரத்த ஆரம்பித்த கொல்கத்தாவுக்கு ஆரம்பமே மோசமாக அமைந்தது. 20 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைப் பறிகொடுத்தது. ஜெகதீசனும் அணித் தலைவர் நிதிஷ்ராணாவும் இணைந்து ஓட்டங்களைக் குவித்தனர். ஜெகதீசன் 36 ஓட்டங்களுடன் நடையைக்கட்ட நுழைந்த ரசலும் வந்த வேகத்தில் வெளியேற சன்ரைஸஸ் பக்கம் ஆட்டம் திரும்பியது. ரிங்கு சிங் தொடர்ந்து நுழைந்த வேகத்தில் ஆட்டம் மீண்டும் சூடு பிடித்தது. ராணா ஒருபுறம் வெளுக்க மறுபுறம் சிங் தனது அதிரடியைத் தொடர்ந்தார். இருப்பினும் ராணா இறுதிக் கட்டத்தில் 41 பந்துகளில் 75 ஓட்டங்களுடன் வெளியேறினார். தாகூர் களமிறங்கினார். குஜராத்துக்கு எதிரான ஆட்டத்தில் இறுதி நேரத்தில் திருப்புமுனையை ஏற்படுத்தி கொல்கத்தாவுக்கு வெற்றியைத் தேடிக்கொடுத்ததைப் போன்று இந்த ஆட்டத்திலும் அதிசயங்களை நிகழ்த்துவார் என்று எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றத்தைக்கொடுத்தார். இறுதியில் 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 205 ஓட்டங்களை மாத்திரமே கொல்கத்தா பெற்றுக்கொண்டது. பந்து வீச்சில் மயங் மார்க்கண்டே, மார்கோ ஜென்சன் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். சதமடித்து சன்ரைஸஸின் வெற்றிக்கு காரணமாக ஹரி புருக் தெரிவானார். (ஒ-.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இயற்கையே எம்மிருப்பு!

வடமாகாணத்தின் பல பகுதிகளில் தற்போது முதல் அடுத்த இரண்டு வாரங்களுக்கு கடும் வெப்ப நிலை நிலவும் என்றும் சில இடங்களில் வெப்பம் 40 பாகை செல்சியசைத் தொடும் என்றும் பகிரங்கமாக எச்சரித்திருக்கின்றார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை விரிவுரையாளரான நாகமுத்து பிரதீபராஜா. கோடைகாலமாக இக்காலத்தில் வடமாகாணத்தில் வெப்பநிலை உச்சம் தொட்டிருப்பது வழமைதான். ஆனால், ஒப்பீட்டளவில் கடந்த சில தினங்களாக தாங்கமுடியாத அளவுக்கு வெப்பம் வாட்டி வதைக்க ஆரம்பித்திருக்கும் நிலையில், அதன் தீவிரத் தன்மையை பறைசாற்றும் வகையில் அமைந்திருக்கின்றது விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜாவின் கருத்து.

கோடைகாலம் ஆரம்பித்ததும், குடிதண்ணீர் பற்றாக்குறைகள் தொடர்பான பிரச்சினைகள் வடக்கில் பரவலாக முளைவிடுவதுண்டு. கடந்த பல தசாப்தங்களாகவே மாறாத அபத்தம் இது. ஆனால், இம்முறை இந்தப் பிரச்சினை பூதாகரமாகப் போகின்றமையையும் பிரதீபராஜாவின் கருத்து கட்டியம் செய்கின்றது. தீவக மக்கள் பல தசாப்தங்களாகவே நிலையானதொரு குடிதண்ணீர் பொறிமுறை இல்லாமல் அல்லும்பகலும் அவதிப்பட்டு வருகின்றனர். திட்டங்கள் மாறிமாறி முன்வைக்கப்படுகின்றனவே அன்றி, அவை செயற்படுத்தப்படுவதாகவோ அந்த மக்களுக்கு குறைந்தபட்சம் குடிதண்ணீரையாவது எந்தச் சிக்கலுமின்றி வழங்க நடவடிக்கை மேற்கொள்வதாகவோ இல்லை. பிரச்சினை தீவிரம்பெற்று தண்ணீர் பற்றாக்குறை தாண்டவமாடுவதற்கு முன்னர் இந்த வெப்பப்பேரிடரை எதிர்கொள்வதற்குரிய பொறிமுறையை உரிய அதிகாரிகள் விரைந்து வகுக்கவேண்டும்.

இதேவேளை– நாம் மனிதத்துடனும் ஜீவகாருண்யத்துடனும் செயற்பட வேண்டிய காலமாகவும் இக்காலம் அமைந்திருக்கின்றது. கட்டாக்காலி கால்நடைகளும், நாய்களும், இதர விலங்குகளும், பறவைகளும் தண்ணீருக்கு அங்கலாய்த்துத் திரிகின்றமையை இப்போதே அவதானிக்க முடிகின்றது. அதிலும் நகரப் பகுதிகளில் இதுவொரு துயர்கதை. அந்த வாயில்லா ஜீவன்களின் தாகத்தை தணிப்பதற்கு முடிந்தளவு செயலாற்ற வேண்டிய கட்டாயமும் காலக்கடமையும் எமக்கிருக்கின்றது. பிரதேசசபைகளும், நகரசபைகளும் முழுமையான ஈடுபாட்டுடன் பணியாற்றுமிடத்து இந்த இடர் நிலையிலிருந்து வாயில்லா ஜீவன்கள் வதைபடுவதை ஓரளவேனும் பாதுகாக்கமுடியும். எனவே அதற்கு ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள துறைசார் தரப்பினர் ஆத்மார்த்தமாக முன்வரவேண்டும்.

வடமாகாணம் பசுமையிலிருந்து விலகி தொலைதூரம் பயணப்பட ஆரம்பித்திருக்கின்றது என்ற கசப்பான உண்மையையும் '40 பாகை செல்சியஸ்' என்ற இந்த வெப்பப் பேரிடர்நிலை பறைசாற்றவே செய்கின்றது. பொது அமைப்புக்களும், சமூக ஆர்வலர்களும் மரநடுகைத்திட்டங்களைச் செயற்படுத்துகின்றபோதிலும், உண்மையில் அதன் வீச்சு குறைவாக இருக்கின்றது என்பதே யதார்த்தம். அதாவது வடக்கில் மரங்கள் நட்டுப் பராமரிக்கப்படுவதைக் காட்டிலும், அவை அழிக்கப்படும் வேகம் பலமடங்கு கூடுதலானதாக இருக்கின்றது என்று இயற்கையை அழிக்கும் தொலைக்கும் இழிநிலையில் இருந்து நாம் எப்போது மீள்கின்றோமோ அன்றுதான் எமக்கு மீட்சி. அதுவரை வெப்பப்பேரிடர் வடக்கை ஆட்கொண்டே தீரும். ஆனால், எய்தவன் இருக்க அம்பை நோகின்ற கதையாக, இயற்கை அழிப்பைச் செய்கின்ற தரப்பாக எவரோ இருக்கையில், அதன் பாதிப்புக்களை எதிர்கொள்பவர்களாக அப்பாவி மக்களும் தீவக வாசிகளும் இருக்கின்றமைதான் ஆகப்பெரும் துயரம்.

சோலைவனமொன்று எம் கண்முன்னே பாலைவனமாகிக் கொண்டிருக்கின்றது. இயற்கையை நேசியுங்கள். இயற்கையுடன் இணைந்தமுறையில் வாழப்பழகுங்கள். எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு மரங்களை அதிகம் அதிகம் நடுங்கள். இயற்கையின் இருப்புத்தான் எம்மிருப்பு. அதைத்தான் இன்றைய நாள்களில் காலம் உணர்த்திக்கொண்டிருக்கின்றது.

### நாளொரு நல்வார்த்தை

"மனிதர்களை எடை போட்டுக்கொண்டே இருந்தால் அவர்களை நேசிக்க நேரம் இருக்காது"
– சோக்கிரட்டீஸ்




# கடன் வழங்குநருடன் முழுமையான ஈடுபாடு

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 15**

**இலங்கைக்குக் கடன்வழங்கிய அனைத்துத் தரப்பினருடனும் ஈடுபாட்டைப் பேணுவது குறித்து இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் கடன்மறுசீரமைப்புச் செயன்முறையை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கு கடன்வழங்கிய அனைத்து நாடுகள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் வெளிப்படையான முறையில் அனைவரையும் சமமாகக் கருதும் விதத்தில் ஈடுபாட்டைப் பேணுவது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளோம். சர்வதேச நாணயநிதியத்தின் திட்டத்தை நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பித்துள்ளோம். சர்வதேச நாணயநிதியத்துடனான முக்கியமான அம்சங்களை உள்வாங்கும் புதிய சட்டவரைவுகளை சமர்ப்பிக்கவுள்ளோம்.

இலங்கை சர்வதேச நாணயநிதியத்திடம் நிதி ஆதரவுடனான முழுமையான பொருளாதாரத்தைச் சீர்படுத்தும் திட்டத்தைக் கோருவதற்கு உதவிய நிதி உத்தரவாதங்களை தக்க தருணத்தில் வழங்கியமைக்காக பரிஸ் கிளப் மற்றும் பரிஸ் கிளப்பில் அங்கம் வகிக்காத தரப்பினருக்கு நன்றியைத் தெரிவிக்கின்றோம் - என்றார். (ம-இ)

## புத்தாண்டு காலத்தில் போலி நாணயத்தாள்!

### பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 15

புத்தாண்டு காலங்களில் போலி நாணயத்தாள்கள் கைமாறக்கூடும் என்பதால், பணத்தைப் பயன்படுத்துவதில் கவனமாக இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்ததாவது:

பண்டிகைக் காலத்தில் போலி நாணயத்தாள்களை சந்தையில் கைமாற்றுவதற்கு மோசடிக்காரர்கள் முயற்சிக்கின்றனர் என்ற தகவல் கிடைத்துள்ளது. எனவே பொதுமக்கள் தமது கைகளுக்கு போலி நாணயத்தாள்கள் கிடைக்காமல் இருப்பதை உறுதிப்படுத்தவேண்டும் - என்றார். (ம-இ)

## திருமலைக் கடற்பரப்பில் மிதக்கும் திரவப்படலம்

### மாதிரிகள் பரிசோதனை

திருகோணமலை, ஏப். 15

திருகோணமலைக் கடற்பரப்பில் தார் போன்ற திரவப் படலம் தொடர்பில் அதன் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனை மேற்கொள்ளப்படும் என கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடலை அண்மித்த பகுதியில் பயணித்த கப்பலிலிருந்து கறுப்புத்துகள்கள் வெளியேறியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நிலையில், திருகோணமலை துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த கப்பல்களிலும் முன்னேற்பாடாக சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச-இ)

### நாளை

16.04.2023
ஞாயிற்றுக்கிழமை
சித்திரை 03

சுபநேரம் : 09,04 - 10.34
ராகுகாலம் : 04.34 - 06.04

ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்க அரசு கங்கணம்

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு விமல் வீரவன்ஸ எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 15
ஊடகத்தின் கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்குவதற்கு இந்த அரசாங்கம் புதிய சட்டத்தை கொண்டுவந்தால் அரசிலுள்ள அனைவரும் வெட்கித் தலை குனிய வேண்டும். இதற்கு ஆதரவு வழங்கமாட்டோம்.

இவ்வாறு வரவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:
ஒருபுறம் புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம், அந்தச்சட்டத்தை மேலும் வலுப்படுத்தும் விதமாக மறுபுறம் ஊடகங்களை கட்டுப்படுத்த புதிய சட்டம். இரண்டு கொடூரச்சட்டங்களை ஒரேதடவையில் கொண்டுவர அரசு கங்கணம் கட்டி நிற்கிறது. மக்களின் ஜனநாயக உரிமையை, கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்கும் எந்தவொரு சட்டத்துக்கும் நாம் ஆதரவு வழங்கமாட்டோம்.
எதேச்சதிகார வழியில் இந்த அரசு பயணித்தால் அனைவரும் ஒன்றிணைந்து அரசை ஓட ஓட விரட்டியடிப்போம்.



நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவோம் - என்றார். (ச-22)

# ஊடக சுதந்திர பறிப்புக்கு பெரமுன இடமளிக்காது!

*கூறுகிறார் மஹிந்த*

கொழும்பு, ஏப். 15
மக்களுக்கும் ஊடகங்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு சட்டத்துக்கும் பொதுஜன பெரமுன ஆதரவளிக்காது. மக்கள் பக்கம் நின்று நாட்டின் நலன் கருதியே நாம் முடிவு எடுப்போம்



இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் புதிய சட்டம் ஆகியவற்றை அரசு கொண்டுவரும் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
சுதந்திரமான ஊடக கருத்துச் சுதந்திரம் அற்ற நாட்டில் சர்வாதிகார ஆட்சி தலைதூக்கும். அதற்கு ஒருபோதும் இடமளிக்கமுடியாது. மொட்டு அரசு சர்வாதிகார அரசு இல்லை என்பதை அனைவரும் கவனத்தில்கொள்ள வேண்டும்.
மக்களுக்கும் ஊடகங்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு சட்டத்துக்கும் பொதுஜன பெரமுன ஆதரவு. மக்கள் பக்கம் நின்று நாட்டின் நலன் கருதியே நாம் முடிவு எடுப்போம் - என்றார். (ச-22)

# ஊடக விமர்சனத்துக்கு அஞ்சியே புதிய சட்டம்!

## ஆதரியோம் என மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 15
**விமர்சனங்களுக்கு அஞ்சி ஊடக சுதந்திரத்தை பறிக்க அரசு புதிய சட்டமொன்றை கொண்டு வருகின்றது. ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் எந்தவொரு சட்டத்துக்கும் நாம் ஆதரவு வழங்கமாட்டோம்.**

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் புதிய சட்டம் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.
இதுதொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருத்துத் தெரிவித்தபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
தொலைக்காட்சிகள், வானொலிகள் மற்றும் சமூக ஊடகங்கள் சுதந்திரமாக இயங்கவேண்டும். புதிய சட்டத்தின் மூலம் ஊடக சுதந்திரத்தை தட்டிப் பறிக்க அரசு முயல்கின்றது.
ஊடகங்களின் விமர்சனங்களுக்கு இந்த அரசு ஏன் அஞ்சுகின்றது? எமது நல்லாட்சி அரசையும் சில ஊடகங்கள் சகட்டுமேனிக்கு விமர்சித்தன. அதை நாம் எதிர்கொண்டோம்.
விமர்சனங்களை எதிர்கொள்ள அவற்றுக்குத் தகுந்த பதில் வழங்க அரசுக்கு முதுகெலும்பு தேவை- என்றார். (ச-22)

# ஊழல் ஒழிப்புச் சட்டவரைவு வெளிப்படைத்தன்மையற்றது!

கொழும்பு, ஏப். 15
புதிய ஊழல் ஒழிப்புப்புச்சட்டம், தகவல் அறியும் உரிமைச்சட்டம் உட்பட ஏனைய எல்லாச் சட்டங்களையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டது என ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு தெரிவித்துள்ளது.
இந்தச் சட்டம் தொடர்பில் அந்த அமைப்பால் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில், புதிய ஊழல் ஒழிப்புச்சட்டம் 1994ஆம் ஆண்டின் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் 1975ஆம் ஆண்டின் சொத்துக்கள் பொறுப்புகள் பற்றிய சட்டத்துக்குப் பதிலீடாகக் கொண்டு வரப்படுகிறது.
இந்தச் சட்டவரைவு விரைவில் வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளது. புதிய சட்டத்தின் பிரகாரம் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் கடமையாற்றும் அதிகாரிகள் இரகசியம் பேணும் ஒப்பந்தத்தில் கையொப்பமிடவேண்டும். இது தகவல் அறியும் உரிமைச்சட்டத்தை மீறுவதாக அமைகிறது.
இது இரகசியத்தன்மையை ஊக்குவிப்பதுடன் வெளிப்படைத்தன்மையை மறுக்கிறது. எனவே, சர்வதேச நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவியுடன், சட்டத்தில் உள்ள இந்த விடயங்களை சரிசெய்து பொதுமக்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் உதவியுடன் ஊழலை ஒழிக்க முன்வரவேண்டும். காகிதத்தில் எழுதுவதால் மட்டும் ஊழலை ஒழித்துவிட முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-22)

# இன்றைய நாள்



# (ராசிபலன்)



**மேடம்:** பிணக்குகள் நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உணவு விடயத்தில் கவனம் தேவை. நல்ல செய்தி கிடைக்கும்.



**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் ஏற்பட்டாலும், மகிழ்ச்சியே ஏற்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.



**மிதுனம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறை முகத் தொல்லைகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படும் . சிரமங்கள் நீங்கி மகிழ்ச்சி உண்டாகும்.



**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும்.



**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சி சாதகமாக முடியும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த பணம் கிடைக்கும். இடையூறுகள் நீங்கும்.



**கன்னி:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயல் படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.



**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சிரமங்கள் நீங்கி மகிழ்ச்சி உண்டாகும்.



**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.



**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டு. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம்.



**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவன்ம் தேவை. கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.



**கும்பம்:** கருத்துவேறுபாடுகள் நீங் கும். செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்பு குறையும். தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.





**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகப் பரப்பின் துணிச்சலான ஆளுமையை இழந்துவிட்டோம்

## பொ.மாணிக்கவாசகம் மறைவுக்கு யாழ். ஊடக அமையம் இரங்கல்

யாழ்ப்பாணம், ஏப். 15

ஊடகப் பரப்பில் பேனா முனையின் துணையோடு ஜனநாயகத்துக்கான போராட்டங்களில் துணிச்சலாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட பொ.மாணிக்கவாசகம் என்ற ஊடக ஆளுமையை நாம் இழந்துவிட்டோம் .

இவ்வாறு யாழ்.ஊடக அமையம் இரங்கல் வெளியிட்டுள்ளது. இதுதொடர்பில் அனுப்பிவைக்கப்பட்ட இரங்கல் செய்தியில் மேலும் உள்ளதாவது:

இறுதிவரை தற்துணிவுள்ள பேனா முனை போராளியாகத் திகழ்ந்தவர் மூத்த ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகம்.

உள்நாடு மற்றும் சர்வதேச மட்டத்தில் ஊடகங்களில் கோலோச்சிய ஆளுமையின் கரங்கள் ஓய்ந்துவிட்டன. ஓய்வின்றி ஒலித்த குரல் அமைதி கொள்கிறது.

போர்க்காலத்திலும் போருக்குப் பின்னரான காலத்திலும் செய்திகளை நடுநிலைத் தன்மையோடு வெளிப்படுத்தியவர். தமிழ்மக்களின் அவலங்களை உலகறியச் செய்தவர். உயிர் அச்சுறுத்தலுக்கும் மத்தியில் சோரம் போகாது தனது கடமையை செவ்வனே ஆற்றியவர் - என்றுள்ளது. (ச)

# முன்பள்ளிகளுக்கு உபகரணங்கள்

சாவகச்சேரி, ஏப். 14

கைதடியில் உள்ள அனைத்து முன்பள்ளிகளின் கற்பித்தல் தேவைகளுக்குரிய உபகரணங்கள் பசுந்தேசம் அமைப்பினரால் அண்மையில் வழங்கப்பட்டன.

பசுந்தேசம் அமைப்பின் பொருளாளர் இராமலிங்கம் ரூபனின் பிறந்தநாளை முன்னிட்டு அவரின் நிதியுதவியில் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் கூட்டுறவு 100 ஆண்டுகள் நிறைவை எட்டியிருக்கும் நிலையில் நிகழ்வில் கலந்துகொண்ட நூற்றுக்கணக்கான முன்பள்ளி சிறுவர்களுக்கு சேமிப்புப் பழக்கத்தை ஆரம்பிப்பதற்காக உண்டியல்களுக்கும் வழங்கப்பட்டன. (எ-14,159)

# கந்தபுராண படனம்

யாழ்ப்பாணம், ஏப். 15

நீர்வேலிக் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டுக் கந்தபுராணப் படனப் பூர்த்தி நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இன்று சனிக்கிழமை விசேட அபிஷேக ஆராதனைகள், மகேஸ்வரபூசை என்பன நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளன என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-66)


வலுவிழந்தோர் புனர்வாழ்வு சங்கம்

## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபை தெரிவும்

எமது சங்கத்தின் புதிய நிர்வாக சபை தெரிவுக்கான பொதுக் கூட்டம் **எதிர்வரும் (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சங்க சிவராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் தலைவர், வைத்திய கலாநிதி எஸ். சிவபாதமூர்த்தி** தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து தங்கள் ஒத்துழைப்பினை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்**

1. மங்கல விளக்கேற்றல்
2. வரவேற்புரை / தலைமையுரை
3. பொதுக்கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
4. 2019 - 2023 பங்குனி மாதம் வரையான செயற்திட்ட அறிக்கை சமர்ப்பித்தல்.
5. 2022 ஆம் ஆண்டுக்கான கணக்கறிக்கை சமர்ப்பித்தல்.
6. செயற்திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடல்.
7. புதிய நிர்வாகசபைத் தெரிவு
8. புதிய நிர்வாகசபையின் ஏற்புரை
9. நன்றியுரை

**47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.**

(CR/24459)AH-1


# சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வு!

அனலைதீவு அருணோதயா சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் ஆண்டு நிறைவை முன்னிட்டு சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா நேற்று ஆரம்பமாகியது.

இன்று காலை 9 மணிக்கு படகுப் போட்டிகள் மற்றும் நீச்சல் போட்டிகள் இடம்பெறும்.

தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு மைதானத்தில் வேடிக்கை விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன என நிலையச் செயலாளர் அறிவித்துள்ளார். (ச-9)

## மரண அறிவித்தல்



### திருமதி ஜானகி தம்பிராஜா

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டி, கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜானகி தம்பிராஜா கடந்த (11.04.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காங்கேசம்பிள்ளை - ஞானம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற தம்பிராஜா (தம்பிராஜா மாஸ்டர் - Uduppiddy American Mission College) அவர்களின் ஆருயிர் மனைவியும், சிவம் (சிவநாதன்- Former District Manager, National Housing Development Authority, Mannar, Sri Lanka), காலஞ்சென்ற Dr. வசந்தகுமார் (Dr. Tham, Former Director of Computek College, Canada, Former Area Engineer, Ceylon Electricity Board, Hali - Ela), நிம்மி (நிர்மலாதேவி - Lecturer, Open University, UK), விஜயன் (விஜயகுமார் - Teacher, Manurewa High School Newzeland), ரவி (உதயகுமார் - Former Acountant, Immigration Advisory Service UK), கலா (கலாதேவி - Instructor, Canadion Skills Development Center, Canada) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானம் (ஞானேஸ்வரி - Sri Lanka), ஜெயா (ஜெயக்குமாரி - Canada), குமார் (விஜயகுமார் - UK), அருந்தா (அருந்ததி - New Zealand), சாந்தினி (UK), சர்வா (சர்வேஸ்வரன் - Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆரணி, வைதேகி, சேரன், ஆரூரன், Dr. விதுஷன், Dr. அஸ்வினி, விக்னேஷ், அரபி, ஆரன், பிரணவன், சாய் - கிஷோர், சூ - ஆன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அகான், வேதா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/ 23842)AH-1

**தகவல்: த.சிவநாதன் (மகன்)**

# அகங்கனலி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 15

வற்றாப்பளை கலையியல் திரைப்பட சர்வதேச கூடத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் பழைய கச்சேரி வளாகத்துக்குள் அகங்கனலி கலை நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளன.

வற்றாப்பளை கலையியல் திரைப்பட சர்வதேச கூடமானது வடக்கின் சுயாதீனமான கலை, திரைப்படம், ஊடகம் மற்றும் நாடகக் கலைஞர்களைக் கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் இயங்கிவருகிறது. நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா உட்பட பலர் பிரமுகர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-14,20)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.15

நல்லூர் வடக்கு சட்டநாதர் வீதி கொன்றையடி திருவருள் மிகு வைரவப் பெருமானின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும், 20ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ய)

## மரண அறிவித்தல்



### கங்கமௌலீசன் பூலோகதிரவியம்

(அச்செழு மத்தி - நீர்வேலி)

அச்செழு மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கங்கமௌலீசன் பூலோகதிரவியம் நேற்று (14.04.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கங்கமௌலீசனின் அன்பு மனைவியும், அமரர்களான நாகமுத்து - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், அமரர்களான சரசாலை இளையதம்பி - சாந்தநாயகி தம்பதியரின் அன்பு மருமகளும், பூபாலசிங்கத்தின் (இளைப்பாறிய மின்சாரசபை உத்தியோகத்தர்) சகோதரியும், காலஞ்சென்ற செல்வநாயகியின் (வைத்தியர் இராசாத்தி) மைத்துனியும், நிதர்சனின் (பொறியியலாளர், கொழும்பு) அன்பு மாமியும், சிவரூபியின் சிறிய தாயாரும், மாதுரி, சிந்தூரி ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா (அதிபர்), பூரணம், கந்தையா (லிகிதர்) ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அச்செழுவில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் அச்செழு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அன்பு வாசம்'
அச்செழு மெ.மி.த.க. பாடசாலை அருகில்
நீர்வேலி.


தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உங்கள் கனவு இல்லம் ஒன்றை அமைப்பதற்கு யாழ்நகருக்கு அருகாமையில் காணி ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்.
- உங்கள் முதலீட்டை அசையாச்சொத்து ஒன்றின் மூலம் பெறுமதியானதாக்கிக் கொள்ள உடனே முந்துங்கள்.

# காணி விற்பனைக்கு உண்டு

**பலாலி வீதி, கோண்டாவில்.**





- 54 பரப்பு காணி தேவைக்கேற்ப பாகங்களாக பிரித்துக்கொடுக்கப்படவுள்ளது ( 18அடி பாதை வசதி உண்டு )
- நல்ல குடிநீர், சிறந்த சமூகச்சூழலுடன் கூடிய செம்மண் விவசாய குடியிருப்பு நிலம்.
- திருநெல்வேலி சந்தை, மருதனார்மடம் சந்தை மற்றும் பெற்றோல் நிலையம், K.K.S Road பலாலி வீதி railway station, பிரபல திருமண மண்டபங்கள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மிக அருகாமையில் உள்ளது.
- சொத்துக்கள் முறையாக பராமரிக்கப்பட்டு ஆவணங்கள் தெளிவாக உள்ளன.
- ஆயுள் கால உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளுங்கள்.

**077 2757484**
**077 1048865**


## மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 07 . 1954



இறப்பு 14 . 04 . 2023

### பரமு குமாரசாமி

புத்தூர் கிழக்கு, குமாரசாமி வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பரமு குமாரசாமி நேற்று (14.04.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமு - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், நாகம்மாவின் அன்புக் கணவரும், துசிதாசன், காலஞ்சென்ற துஷ்யந்தன் மற்றும் துசிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணன் - சின்னத்தங்கம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராசையா, சரஸ்வதி, சின்னம்மா, இந்திரா, செல்லம்மா, மகேஸ்வரி, திலகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், ஹன்சிகா, அதீஸ், கிருத்திக்ஸன், பிரணவ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிழக்கு அந்திராணை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்

077 025 1455

(CS/50011)AH-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 - 11 - 1954



மறைவு 13 - 04 - 2023

### திருமதி சோதிநாதன்ஐயா கெங்காதேவி

உடுவில் கிழக்கு சோமராந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், 234, செம்மணி வீதி, நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிநாதன்ஐயா கெங்காதேவி கடந்த (13.04.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கம் நாகேஸ்வரி தம்பதியினரின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்ற சண்முகநாதன் சோதியம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகநாதன் சோதிநாதன்ஐயாவின் (நாயன்மார்கட்டு, வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தான பரிபாலகரும், ஓதுவாரும்) பாசமிகு மனைவியும், கணேசநாதன் (பௌதீக திட்டமிடல் பிரிவு, யாழ். மாநகர சபை), காந்திமதி (UK), பிரதீபன் (ஆரணி பதிப்பகம் நுணாவில் மத்தி, சாவகச்சேரி), ஜனனி (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஶ்ரீகாந்தன் (UK), பாமினி, ஞானவழகன் (UK) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கௌரியம்மா, கணேசராசா (Studio- Golden Duck) , ஞானகலா, சிவநேசன் (UK), நகுலேஸ்வரி ஆகியோரின் உற்ற சகோதரியும், கணேசரட்ணம், தனலட்சுமி, சோமசுந்தரம், பத்மராணி (UK), திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனியும் நிஷாந்த், நிஷாங்கி, நிலானி, ரிசாளினி, பிரதீஷ், அருண், அரண்யா, ஆரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (17.04.2023) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

234, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு.

தகவல்
குடும்பத்தினர்.
077 666 0302

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Griffin College London - Sri Lanka

(International Examination Board) Collaboration with

## Alagappa Performing Arts Academy
and
## Alagappa University For Degree Courses

Alagappa Performing Arts Academy



Mr.Nathan Rahulan
Founder / Managing Director



Mrs Padma Rahulan
Founder / Chairman

முதன்முறையாக இலங்கையில்

## கிரிஃபின் கல்லூரி லண்டன்

### (சர்வதேச நுண்கலை தேர்வு ஆணையம்)

**Alagappa Performing Arts Academy** மற்றும் அழகப்பா பல்கலைக்கழகம்

இணைந்து நடத்தும் இளங்கலை பட்டம், முதுகலை பட்டம்

தரம் 1 முதல் - ஆசிரியர் பயிற்சி வரை தேர்வுகள் எதிர்வரும் ஆடி முதல் ஆவணி (July - August 2023) மாதங்களில் நடைபெறும்.

பரீட்சை விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

0773478585; 0776177884; 0776539457; 0776137270; 0773478043; 0774146287

WhatsApp: 0044 7480757792 / 0044 7740100981

Website: www.griffincollege.org.uk; www.facebook.com: Griffin College London; www.youtube.com : Griffin College London

இளங்கலை பட்டம்: BA Bharathanatyam, BA Vocal, BA Instruments, BA Percussion Instruments

முதுகலை பட்டம் : MA Bharathanatyam, MA Vocal, MA Instruments, MA Percussion Instruments

Grade 1 - Diploma Certificate Course in Bharathanatyam / Kandiyan / Carnatic Vocal and Instruments/ Percussion Instruments/Hindustani Vocal and Instruments

### தரம் 1 முதல் 6 வரை

| | |
|---|---|
| இந்திய செவ்வியல் ஆடல்கள் | நாட்டிய திலகம் பட்டம் |
| கண்டியன் நடனம் | நாட்டிய திலகம் பட்டம் |
| கர்நாடக இசை / இசை கருவி | இசை திலகம் பட்டம் |
| வாய்ப்பாட்டு / வீணை / வயலின் / புல்லாங்குழல் / கீபோர்ட் / சக்ஸபோன் / நாதஸ்வரம் / கிதார் | |
| ஹிந்துஸ்தானி இசை / இசை கருவி | இசை திலகம் பட்டம் |
| தாள வாத்தியங்கள் | வாத்திய திலகம் பட்டம் |
| கஞ்சீரா / மிருதங்கம் / தபேலா / மோர்சிங் / கடம் / தவில் | |

### தரம் 7 முதல் 8 வரை (ஆசிரியர் பயிற்சி வரை டிப்ளமோ பட்டயம்)

| | |
|---|---|
| இந்திய செவ்வியல் ஆடல்கள் | : நாட்டிய கலைமணி பட்டம் |
| கண்டியன் நடனம் | : நாட்டிய கலைமணி பட்டம் |
| கர்நாடக இசை / இசை கருவி | : இசை கலைமணி பட்டம் |
| வாய்ப்பாட்டு / வீணை / வயலின் / புல்லாங்குழல் / கீபோர்ட் / சக்ஸபோன் / நாதஸ்வரம் / கிதார் | |
| ஹிந்துஸ்தானி இசை / இசை கருவி | : இசை கலைமணி பட்டம் |
| தாள வாத்தியங்கள் | : வாத்திய கலைமணி பட்டம் |
| கஞ்சீரா / மிருதங்கம் / தபேலா / மோர்சிங் / கடம் / தவில் | |

### Performance Diploma (Atrukai) Solo Recital: Bharathanatyam / Vocal and Instruments / Percussion Instruments

Award Title: NATIYA VALARMANI / ISAI VALARMANI / VADYA VALARMANI



Sri Lanka Country Advisor
Kalakeerthi
Smt.Shanthini Sivanesan
Retired Training College Lecturer



Sri Lanka Country Coordinator
Kalasoori
Smt.Vasugy Jegatheeswaran
Retired Dance Teacher

### செயல்திறன் டிப்ளமோ ஆற்றுகை பட்டயம்

| | | |
|---|---|---|
| இந்திய செவ்வியல் ஆடல்கள் | : | நாட்டிய வளர்மணி பட்டம் |
| கர்நாடக இசை / கருவி இசை | : | இசை வளர்மணி பட்டம் |
| தாள வாத்தியங்கள் | : | வாத்திய வளர்மணி பட்டம் |

### Head of Department

Head of Dance



Dr (Mrs) Arulchelvi Kirupairajah
BFA (Honst),M.A, M.Pjil,Ph.D
Senior Lecturer
Department of Dance
University of Jaffna

Head of Vocal



Dr Ms Siyamalangi Karunakaran
BFA, MFA, M.Phil, Ph.D
Senior Lecturer
Swami Vipulananda Institute of Aesthetic Studies
Eastern University, Sri Lanka.



Mr. Gopithas Sundaramoorthy
BFA (Honst)
Lecturer
Department of Music
University of Jaffna.



Dr. Mr.Nagaratnam Mathavan
BFA, MFA, Ph.D
Lecturer
Swami Vipulananda Institute of Aesthetic Studies
Eastern University, Sri Lanka.

### Graded and Diploma Programme Coordinator



Mrs Agalyah. Rajabharathy
MFA Inservice Adviser (Dance)
Zonal Education Office, Jaffna.



Isaikalaimani
Mrs Vasaspathy Rajeendran
Retired Music Teacher



Isaikalaimani
Mr. sinnaiya Thurairajah
Retired Music Teacher

### Degree Programme Coordinator



Dr Ushanthy Thuraisingam
Senior Lecturer
BFA, MFA,Ph.D
Swami Vipulananda Institute of Aesthetic Studies
Eastern University, Sri Lanka.



Dr (Mr) Arunanthy Aruran
BFA, MFA,Ph.D
Carnatic Music-Lesturer
University of Visual and Performing Arts, Colombo.



Dr Dhammika Lankatilleke
BFA, MFA,Ph.D
Senior Lesturer & Former Head
Department of Kandyan Dance
University of Visual and Performing Arts, Colombo.



Mr. Vairavapillai Venilan
Founder
Layanathalaya

### Certificate Programme Coordinator



Mrs. Subashini Sarveswaran BFA
Director Abinaya Narthanalayam



Dr(Ms.)Nilanka Liyanage
BFA, MFA,Ph.D
Sedior Lecturer in Swami Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka.



Mrs.Ragavan Brindha
MFA
Instructor, Swami Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka.



Mr.Aruchunaa Sudharshan
Mridangam Instructor



Mrs.Subashiny Branavan BFA
Director, Formar Thejaswaralaya Kalaikodam
Colombo.

### Committee members - Graded / Diploma



Dr (Mrs) Suhanya Aravinthon,
BFA (Honst), MFA, Ph.D
Senior Lecturer,
Department of Music,
University of Jaffna,



Mrs. Seethaluxmy Prabhaharan,
BFA (Honst), M.Phil
Senior Lecturer,
Department of Dance,
University of Jaffna.



Mr. Mahendran Lohendran
BFA, MFA, M.Phil.
Temporary Lecturer,
(Miruthangam)
Department of Dance,
University of Jaffna.



Miss. Iswariya Ganesan
BFA , M.A, M.Phil.
Lecturer (veena)
Swami Vipulananda Institute of Aesthetic Studies
Eastern University

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினரின் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. மேற்படி நிகழ்வில் பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த ஏழு மாணவர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. (ய-66)



நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 1ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ய)



யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு உயர்தர பெண்கள் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ய)



சர்வதேச கண்ணிவெடி அகற்றும் தினத்தை முன்னிட்டு விளையாட்டு நிகழ்வு கிளிநொச்சி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கடந்த 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ய-27)



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில், தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகமும் தீவகம் வடக்கு கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய அலைமொழி - 06 நூல் வெளியீட்டு விழா அனலைதீவு ஐயனார் கோவில் அன்னதான மண்டபத்தில் கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ய-9)

# மரண அறிவித்தல்

தோற்றம்
03 . 03 . 1967



மறைவு
14 . 04 . 2023

## திரு. திருநாவுக்கரசு நேசவரதன்
(Marine Engineer - Captain)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வ்சிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு நேசவரதன் நேற்று (14.04.2023) வெள்ளிக்கிழமை நல்லூரான் காலடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் கதிரவேலு திருநாவுக்கரசு அனுஷியாபதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சியாமளா திருநாவுக்கரசு (Civil Engineer), மதிமளா கோபிநாத் (Australia), திருநாவுக்கரசு ஜெயவரதன் (Propritor - Taurus Creations) மற்றும் சிறிமளா பிரசாத்குமார் (சட்ட அலுவலர் BOC வட மாகாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோபிநாத் (Australia), இந்திரகலா (Executive Secretary- SKC), பிரசாத்குமார் (Sajee Jewellers - Colombo) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், அரிநாத் (Australia), ரூபின்நாத் (Australia) விதூஜினி, ரிஷிகேஷான் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனோத், தக்ஷினியின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

30, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
0777 326695
077 325 4827
0777 5366 85

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச...

யாழ்ப்பாணத்திலே தந்தை செல்வா நினைவு மண்டபத்தில் கடந்த முதலாம் திகதி ஏழு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் 22க்கு மேற்பட்ட மத, சமூக மற்றும் தொழிற்சங்க அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டம் நடைபெற்றிருந்தது. அந்தக் கூட்டத்தில், தமிழ் மக்களின் தொன்மையையும் தேசியத்தையும் சிதைக்கும் வகையில் கலாசார, பண்பாட்டு மற்றும் சமூக விழுமியங்களைச் சிதைத்து இருப்பை கேள்விக்கு உள்ளாக்கும் வகையில் சைவ ஆலயங்களை நிர்மூலமாக்கியும் அங்கு பௌத்த சின்னங்களை நிறுவியும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட கலாசார அடிப்படையிலான இனப்படுகொலையை எதிர்த்து போராட்டத்தை வடக்கு - கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் ஒரே நாளில் முன்னெடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதே போன்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கும் இவ்வேளையில் அதனுடைய கடுமையான எதிர் விளைவுகளை கவனத்திற்கொண்டு அந்தச்சட்ட வரைவை எதிர்த்தும் அதை நிறைவேறாமல் தடுப்பதற்கும் ஏனைய தமிழ் பேசும் மக்களினுடைய பிரதிநிதிகளோடு கலந்துரையாடல் நடத்தி ஒன்றிணைந்த எதிர்ப்புப் போராட்டத்தை நடத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதன் தொடர்ச்சியாக போராட்டம் தொடர்பான ஏற்பாட்டுக்குழுவினர் பல்வேறு கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர். முதற்கட்டமாக யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி போராட்டம் நடத்துவது தொடர்பில் அவர்கள் ஆராய்ந்து வருகின்றனர். (அ-ஒ,5)

## 24 பில்லியன்...

வெளி காணப்படுவதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் இடம்பெற்று வரும், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கிக் குழுவின் வசந்த காலக் கூட்டத்தில், சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் கிருஷ்ண ஸ்ரீனிவாசன் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் சுமார் 17 பில்லியன் டொலர் பெறப்படவுள்ள கடன் நிவாரணத்தின் மூலம் ஈடு செய்யப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். மீதமுள்ள 7 பில்லியன் அமெரிக்க டொலரை வெளிநாட்டு நிதியுதவியின் மூலம் ஈடுசெய்யமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-ஒ,இ)

## ரணில்- ...

நகர்வுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சாதகமாகப் பதிலளித்தபோதிலும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அந்த முயற்சியைக் கைவிட்டுள்ளதாக மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பலர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையப்போவதாக வெளியான தகவலின் மத்தியிலேயே இந்தக் கூட்டணி முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது சஜித்துக்கு பிரதமர் பதவியையும் வழங்க ரணில் ஒப்புக்கொண்டிருந்தார் எனவும், அந்தச் சலுகையையும் சஜித் ஏற்கவில்லை எனவும் கூறப்படுகின்றது. (அ-ஒ,இ)

## இராணுவ...

ஆண்டு இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பளத்தில் இருந்து அளவிடப்படும் இந்தக் கொடுப்பனவு கடற்படையில் உள்ள அனைத்து அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

விமானப்படையில் ஸ்குவாட்ரன் லீடர் பதவிக்குக் கீழ் நிலையிலுள்ள அனைத்து அதிகாரிகளுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருக்கிறது.

எனினும் இராணுவத்தில் உள்ள மேல் நிலை மற்றும் கீழ்நிலை அதிகாரிகள் அனைவருக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,இ)

## கீரிமலைக்....

மான திருவுருவச் சிலை சித்திரைப் புத்தாண்டுத் திருநாளான நேற்று வெள்ளிக்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கலந்துகொண்டு திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வலி.வடக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன், திருவுருவச் சிலையை நேர்த்தியாக வடிவமைத்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிற்பத்துறைத் தலைவர் மா.மனோகர், முதியோர்கள், சைவத்தமிழ் ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ஒ,66)

## என்னுடைய...

தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் பகிரங்கமாக இந்த விடயங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாண முதலமைச்சர் பதவியிலிருந்து விக்னேஸ்வரனை அகற்ற வேண்டுமென தமிழ் அரசுக் கட்சியின் ஒரு அணி விரும்பியது. விக்னேஸ்வரனை கவர்ச்சியான வேட்பாளராகத்தான் அப்போது நினைத்தேன். ஆனால், இப்பொழுது வேறுவிதமாக அப்பிராயமுள்ளது. விக்னேஸ்வரனை அகற்ற வேண்டுமென்றால், முதலில் ஐங்கரநேசனை அகற்றவேண்டுமென நினைத்தார்கள். இல்லாத பொல்லாத குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார்கள். விக்னேஸ்வரன் எம்மை பதவிவிலகக் கேட்டார், பதவிவிலகினோம். ஆனால், விக்னேஸ்வரன் பின்னர் நேர்மையாக நடக்கவில்லை.

அவர் மாகாண முதலமைச்சராக இருந்ததற்கும், ஒரு கட்சியை ஆரம்பித்தற்குமிடையில் நிறைய வித்தியாசமிருந்தது. கட்சியை ஆரம்பித்த பின் கைதேர்ந்த அரசியல்வாதியாகிவிட்டார்.

மாகாணசபையில் எங்கள் மீதான குற்றச்சாட்டின்போது நான் பதவிவிலகத் தயாராக இருந்தேன். குருகுலராஜா அதைவிரும்பவில்லை. விக்னேஸ்வரன் என்னையே குருகுலராஜாவிடம் தூது அனுப்பினார். எம் மீதான குற்றச்சாட்டுக்கள் பற்றி நீதியான, பக்கச்சார்பற்ற திணைக்கள ரீதியான விசாரணை மேற்கொள்வதாக உத்தரவாதமளித்தார்.

இதையடுத்து, குருகுலராஜாவிடம்நான் சென்று பேசினேன். குருகுலராஜா பதவிலகல் கடிதத்தைக் கொடுத்தார். அது நடக்காவிட்டால், அவரும் டெனீஸ்வரன் மாதிரி நிலைப்பாடு எடுத்திருப்பார். இதன்பின்னர், விக்னேஸ்வரன் பிரதம செயலரின் ஊடாக விசாரணைக்குழுவொன்றை அமைத்து, அறிக்கை பெற்றிருந்தார். மாகாணசபை கலைந்த பின்னர்தான் எனக்கு அது தெரியும். நான் பிரதம செயலரிடம் போய்க் கேட்டபோது, விக்னேஸ்வரன் கோரியதன்படி விசாரணை அறிக்கை ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், தேவையெனில் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் படி பெற்றுக்கொள்ள முடியுமென்றும் தெரிவித்தார். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி அந்த அறிக்கையைப் பெற்றோம். அந்த அறிக்கையில், அனைத்து அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களும் நிராகரிக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருந்தது.

நான் விக்னேஸ்வரனிடம் போய் இதைப் பற்றிக் கேட்டேன். 'அப்படியா! ஐங்கரநேசன். எனக்குத் தெரியாதே' என்றார். 'உங்கள் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டு, வாங்கப்பட்டுள்ளது' என்றேன். 'சிலவேளை செயலர் தன்னிடம் கையளிக்காமல் விட்டிருக்கலாம்' என்றார். அது பொய். அவருக்கு அது தெரியும். தன்னை ஒரு உத்தமனாகத் தொடர்ந்தும் நிரூபிக்க அவர் விரும்பினார். தன்னுடைய நீதியின் கீழ் தவறான தீர்ப்புக்கள் வழங்கப்பட்டது என்பதை அவர் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அதனால் அவருடன் தொடர்ந்து பயணிப்பதற்கான விருப்பம் என்னிடமில்லை. விக்னேஸ்வரன் அரசியலில் இருக்க விரும்புகிறார். என்னுடைய பார்வையில், அவர் அரசியலில் இருப்பதற்கான சில தகுதிகள் இல்லை.

2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் மின்னஞ்சல் அனுப்பியிருந்தார். அருந்தவபாலனின் சாதியைக் குறிப்பிட்டு, உங்களது சாதியைப் பற்றியும் குறிப்பிடுகிறார்கள், உங்களுடைய சாதியென்ன என அறியலாமா? எனக் கேட்டிருந்தார். நீங்கள் என்ன சாதியாக இருந்தாலென்ன, உங்கள் மீது எனக்குள்ள அன்பு ஒரு துளி கூடவோ, குறையவோ மாட்டாது என்றும் தெரிவித்தார். நான் பதில் போடவில்லை. அவரிடம் நேரில் சென்று சொன்னேன். 'நாங்கள் போராட்டப் பாரம்பரியத்தில் இருந்து வந்தவர்கள். சாதி ஒடுக்குமுறை போன்றவற்றை ஒழிப்பதற்காகவும் போராட வந்தவர்கள். என்னிடம் கேட்டதைப் போல இன்னொருவரிடம் கேளாதீர்கள்' -என்றார். (அ-ஒ,இ)

## பருத்தித்துறையில்...

அன்றையதினம், பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மன்றில் முன்னிலையாகிசாட்சியமளிக்கவுள்ளார்.

புலோலி வடக்கு, கூவில் பகுதியை சேர்ந்த பெண் ஒருவர், பிரசவத்துக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு ஊசி மருந்துகள் ஏற்றப்பட்டுள்ளன. பின்னர், சிசு இறந்து பிறந்ததாக அறிவிக்கப்பட்டது. இது தொடர்பில் நடத்தப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில், தாயாருக்கு ஊசி செலுத்தப்பட்டதன் பின்னர், உரிய முறையில் மருத்துவக்கண்காணிப்பு இன்மையால் கருப்பை வெடித்து, சிசுவுக்கு குருதி செலுத்தப்படுவது தடைப்பட்டுள்ளமை உறுதியானது எனத் தெரிவித்து, மேலதிக விசாரணைக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி கோரியுள்ளார். பாதிக்கப்பட்ட பெண், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்றார்.

இது தொடர்பில் பெண்ணின் உறவினர்களால் முறைப்பாடும் செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் பொலிஸார் நீதிமன்றத்தில் அறிக்கையிட்டதை தொடர்ந்து, இது தொடர்பான விசாரணையை நாளைமறுதினம் திங்கட்கிழமை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-ஒ,இ)

## கார் மீது...

நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் நவாலி, மானிப்பாயைச் சேர்ந்த செல்வ மகேந்திரன் கமலரூபன் (வயது-36) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் நோக்கி நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் பயணித்த சமயம் முழங்காவில் பகுதியில் பொலிஸார் வீதிச் சோதனைக்காக வழி மறித்தும் நிறுத்தாமல் சென்றபோது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் மன்னார் - முருங்கன் வரை பயணித்துள்ளார். பின் முருங்கன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

முழங்காவில் பகுதியில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட பின்னர் முருங்கன் மருத்துவமனைக்கு அவர் சென்றுள்ளபோதிலும் அதற்கிடையில் பல மருத்துவமனைகள் இருக்கதக்கதாக அங்கு செல்லாமல் இருந்தமை தொடர்பிலும், துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் தனியாக காரில் பயணித்திருப்பரா என்பன தொடர்பிலும் பொலிஸார் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர். அவரது காரில் வேறு நபர்கள் இருந்ததாகவும் கூறப்படுகின்றமை தொடர்பிலும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (அ-ஒ,5,56)

## யாழ்ப்பாணத்துக்குச்...

நரேந்திரடி மோடி தெரிவித்துள்ளார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இந்திய மத்திய இணை அமைச்சர் முருகனின் டில்லி இல்லத்தில், இடம்பெற்ற தமிழ்ப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

'இலங்கையில் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்த முதல் இந்தியப் பிரதமர் நான்தான். இலங்கையிலுள்ள தமிழர்கள் உதவிக்காகக் காத்திருந்தனர். எங்கள் அரசாங்கம் அவர்களுக்காக ஏராளமான உதவிகளைச் செய்திருக்கிறது. நான் யாழ்ப்பாணம் சென்றபோது, அங்கு தமிழர்களுக்காக இந்திய அரசால் கட்டப்பட்ட வீடுகள் ஒப்படைக்கப்பட்டன. வீட்டில் நுழையும் முன்பு இடம்பெறும் பால் காய்ச்சும் பாரம்பரிய சடங்கில் நானும் கலந்துகொண்டேன். அதன் காணொலிகள் தமிழ்நாட்டில் வெளியானபோது தமிழ் மக்களிடமிருந்து நான் நிறைய அன்பைப் பெற்றேன்' எனத் தெரிவித்துள்ளார். (அ-ஒ,இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வழிப்பிள்ளையார் ஆலயத் திற்கு அருகாமையில் 02 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-09 வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- ✓ கைதடி சந்தியிலிருந்து 500M தூரம்
- ✓ A-09 வீதியிலிருந்து 50M தூரத்தில் காணி உள்ளது.

தொடர்பு: 076 4365 814

(CS 24449)(J-1)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட 1987 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
(மீன ராசி, உத்திரட்டாதி நட்சத்திரம்)

076 060 6232 / 071 658 7658

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

அல்சேசன் (ஜேர்மன் சப்பேட்)
நாய்க்குட்டிகள்விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 620 1724

## English Classes

Gr. 1 to O/L
தனி, மற்றும் குழு வகுப்புகள்
Let's learn
- ➤ Grammar ➤ School syllabus
- ➤ Spoken ➤ Writing skills

Monthly exam
வீடு வந்தும் கற்பிக்கப்படும்.
077 331 4608 - யாழ்ப்பாணம்.

(CS49976)(AH-1)

## இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
## கொழும்பு விலையில்
## யாழ்ப்பாணத்தில்
## 30% விலைக்கழிவில்

பான்சி பொருள்கள், பிளாஸ்ரிக் பொருள்கள், தையல் உபகரணங்கள், பாடசாலை உபகரணங்கள், கவறிங்வகைகள், கிறீம்வகைகள், விளையாட்டுப்பொருள்கள், சில்வர்வகைகள், கிளாஸ்வகைகள், அலுமினியப்பொருள்கள், மாபிள்வகைகள் அனைத்துப் பொருள்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உரிமையாளர்: தே.கலைத்தாசன் (கரன்)
சரவணபவன் பான்சிகவுஸ்
26/1, ஜிம்மா பள்ளிவால் வீதி, யாழ்ப்பாணம்.
021 315 5900

(cs24453) (N-1)

## மணமகன் தேவை

1981, அச்சுவினி, 2ஆம் பாதம், யாழ் இந்து IT பட்டதாரி செவ்வாய் குற்றமற்ற மணமகளுக்கு இந்து மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

077 156 8181

## வீடு விற்பனைக்கு

சோமசுந்தரம் அவெனியூவில் 1 3/4 பரப்பு வீடு விற்பனைக்குண்டு

தொடர்பு: 077 732 6792 (CS24464)(J-1)

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- 1 பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும் (200.000/=)
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

பார்வையிடும் நேரம் காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை

தொடர்பு:- 076 733 6047, 076 333 6079, 076 733 6093

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு.

நிலப்பரப்பு

புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காப்பற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.
1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்து ஆயிரம் ரூபா மட்டும் (125.000/=)
3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து 1 1/2 KM தூரம்.

தொடர்பு: 076 755 8606, 077 6385 683

(CS 24459)(A-1)

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் மருதனார்மட வீதியில் இரண்டாவது ஒழுங்கையில் (சிவகுலவீதி) 29 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

077 366 8282


(CS49965)(AH-1)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில் 5 பரப்பு 13.72 குளி காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- ❖ அச்செழு வடக்கு நீரவேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- ❖ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ❖ குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- ❖ நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது)
- ❖ 2 பரப்பில் 2 துண்டும் 1 பரப்பு 13.72 குளி காணி துண்டுகள் மட்டுமே உள்ளன.




பார்வையிடும் நேரம் :
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு:
ஜெயம்
077 814 7389
077 986 5457

(CS 24470)(K-1)


## காணி விற்பனைக்கு



யாழ்ப்பாணம் புத்தூரில் பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1/2 KM தூரம், புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்

நிலப்பரப்பு

60 பரப்புக் காணி குடியிருப்புகள் சூழ உள்ள பகுதி நன்னீர் ஊற்று நிலப்பரப்பு 3, 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.



தொடர்பு:
077 076 0389
076 9119 371
076 7390 413

(காபற் மெயின் றோட்டுடனே முழுக் காணியும் உள்ளது.)

(CS 24454) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.